## இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனம் - 2017

இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் 2017 திசெம்பர் 31 முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக 1971 இன் 38 ஆம் இலக்க நிதிஅதிகாரச்சட்டத்தின் 13(1) மற்றும் 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபன அதிகாரச் சட்டத்தின் 29 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(6) பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய 2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இந்த அறிக்கை திகதி வரை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் என்னால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென கருதும் மீளாய்வாண்டின் கூட்டுத்தாபனத்தின் செயலாற்றல் தொடர்பான எனது அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 2.2 நிதிக்கூற்றுக்கள்

### 2.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதி பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களச் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைவு ஆண்டறிக்கை என்பன கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைவு ஆண்டறிக்கை என்பவற்றை 2018 ஒக்தோபர் 18 ஆந் திகதி வரை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2 கணக்கேடுகள் மற்றும் பதிவேடுகளைப் பராமரித்தல்

கூட்டுத்தாபனத்தின் நடவடிக்கைகள் தொடர்ச்சியாக நடாத்திச் செல்லப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டிற்குரிய கணக்கேடுகளும் பதிவேடுகளும் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3 சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் இருப்பு

கூட்டுத்தாபனத்தினால் இறுதியாக தயாரிக்கப்பட்டிருந்த 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காணப்படும் சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் செலவினங்கள் தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| சொத்துக்கள் | பெறுமதி |
|---|---|
| | ரூபா |
| நடைமுறையல்லாத சொத்துக்கள் | 1,713,458,355 |
| நடைமுறைச் சொத்துக்கள் | 449,150,463 |
| மொத்தச் சொத்துக்கள் | 2,162,608,818 |

| | |
|---|---|
| பொறுப்புக்கள் | |
| ---------------------- | |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | 864,474,891 |
| நடைமுறையல்லாத பொறுப்புக்கள் | 205,984,946 |
| | ------------------- |
| | 1,070,459,837 |
| தேறிய சொத்துக்கள் / உரிமை | 1,092,148,981 |
| | -------------------- |
| **மொத்த பொறுப்புக்கள்** | **2,162,608,818** |
| மொத்த வருமானம் | 2,597,580,607 |
| மொத்தச் செலவினம் | 2,857,498,081 |
| பற்றாக்குறை | --------------------- |
| | (259,917,474) |
| | ========= |

## 2.4 பெற வேண்டிய மற்றும் கொடுக்க வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய நிலுவை கடன் மீதி ரூபா 216,613,249 ஆக இருந்தது. இம்மீதியில் 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 30,442,205 நிலுவையும் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 52,602,126 மீதியும் 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 13,912,440 மீதியும் பகுப்பாய்வு செய்ய முடியாத மீதி ரூபா 939,937 உம் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(ஆ) கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் குளிரூட்டிகள் மூலம் வெளிநிறுவனங்கள் மற்றும் தனிநபர்களுக்கு அதிகுளிரூட்டி வசதிகளை வழங்கும் போது மீன் இருப்பினை பொறுப்பேற்கும் போதும் மீள வழங்கும் போதும் பணம் அறவீடு செய்யும் முறை ஒன்றினை முறையாக அறிமுகப்படுத்தியிருக்காத நிலையில் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் அறவிடப்பட வேண்டிய தொகையான ரூபா 6,629,237 இல் 5 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 3,358,995 மீதியும் 1 தொடக்கம் 5 வருடத்திற்குட்பட்ட ரூபா 3,261,535 மீதியும் அறவிடப்படவேண்டியுள்ளது.

(இ) நடப்பாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் நிலுவை கடன்கொடுநர் மீதி ரூபா 217,387,304 ஆக இருந்த போதிலும், இத்தொகையால் 1 தொடக்கம் 2 வருடங்களுக்குட்பட்ட மீதி ரூபா 2,881,212 யும் 2 வருடங்களுக்கு மேற்பட்ட மீதி ரூபா 73,952,086 யும் உள்ளடங்கியிருந்தது.

## 2.5 நிறுவனத்திற்கு எதிராக ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்டபூர்வ நிகழ்வுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) காலாவதியான பாவனைக்கு பொருத்தமற்ற மீன்களை விற்பனை செய்தமையினால் பொது சுகாதார பரீட்சகர்களினால் 03 வழக்குகளும் கூட்டுத்தாபனத்தின் வாகன விபத்து தொடர்பாக இழப்பீட்டு முதல் ரூபா 9,500,000 ஐ கோரி 5 வழக்குகளும் தொழிலாளர்களினால் மீண்டும் வேலை மற்றும் பின் சம்பள இழப்பீடு கோரி 08 வழக்கும் சேவகி ஒருவரினால் ரூபா 5 மில்லியன் ஐ இழப்பீடாக கோரி ஒரு வழக்கும் அடிப்படை உரிமை மீறல் சம்பந்தமாக கூட்டுத்தாபன தொழிலாளரின் வழக்கு 2 உம் கூட்டுத்தாபனத்திற்கு எதிராக குற்றவியல் நீதிமன்றம், மாவட்ட நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்றங்களில் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

(ஆ) 2017 திசெம்பர் 31 ஆந் திகதி இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தினால் ரூபா 16,987,572 பெறுமதியான தொகையை அறவீடு செய்யும் பொருட்டு வெளிநபருக்கெதிராக 09 வழக்குகள் தொடரப்பட்டிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

#### 3.1.1 நிகழ்ச்சித் திட்டம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 பெப்ரவரி 17 ஆந் திகதி அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 01/2014 இல் 5.1 ஆம் பிரிவின் படி அரச வர்த்தக வியாபார நடவடிக்கை குறுங்கால மற்றும் நீண்டகால பார்வையுடனான முகாமைத்துவ நடவடிக்கையானது குறைந்தது 3 வருட காலத்திற்கான கூட்டிணைந்த திட்டத்தை (Corporate Plan) தயாரித்து அதற்கமைய தீர்மாணிக்கப்பட்ட இலக்கை அடைவதற்காக வியாபார தொழிற்பாட்டை மேற்கொள்ளுதல் பணிப்பாளர் சபையின் முழுமையான பொறுப்பாகும். கூட்டுத்தாபனத்தின் 2017 ஆம் ஆண்டு தொடக்கம் எதிர்வரும் காலம் தொடர்பாக கூட்டிணைந்த திட்டமொன்று கணக்காய்வு திகதியான 2018 ஒக்தோபர் 12 வரையிலும் தயாரிக்கப்பட்டு பணிப்பாளர் சபை அனுமதி பெற சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஆ) மேற்குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கையில் 5.2 பிரிவின் படி கூட்டிணைந்த திட்டத்தினை அடிப்படையாகக் கொண்டு எதிர்வரும் நிதி வருடத்தில் செயல்படுத்தப்பட்ட எதிர்பார்க்கப்படுகின்ற செயல் திட்டம் (Action Plan) தயாரிக்கப்பட வேண்டியிருப்பினும் கூட்டுத்தாபனத்தினால் கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்படாத போதிலும் 2017 ஆம் ஆண்டிற்கான செயல் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பார்க்கும் போது நீண்டகால நோக்கத்தை அடையக்கூடிய வகையில் வருடாந்த கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்படவில்லை.

(இ) 2017 ஆம் ஆண்டின் வருடாந்த செயல் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட பாரிய விற்பனை நிலையங்களை நிர்மாணித்தல், புதிய மீன்கள் விற்பனை நிலையங்களை நிர்மாணித்தல், காகில்ஸ், கீல்ஸ் மற்றும் லாப்ஸ் அதிவிசேட விற்பனை நிலையங்களுடாக பகிர்வு வியாபாரத்தை ஏற்படுத்திக் கொள்ளல், புதிய குளிரூட்டும் வளாகங்கள்நிர்மாணித்தல் மற்றும் களஞ்சிய சாலை வசதிகள் நவீனமயப்படுத்தல், HAACAP ஒழுங்குவிதிகளுக்கு அமைய பொதியிடல் பிரிவை மறுசீரமைப்பு செய்தல், காற்றினால் அடைக்கப்பட்ட பொதி (Vaccum Pack) இயந்திரம் கொள்வனவு செய்தல், வியாபார நடவடிக்கையை கணனிமயமாக்கல் நடவடிக்கைகள் தொடர்பான பௌதீக செயல்திறன் அறிக்கை கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்படவில்லை.

#### 3.1.2 செயல்திறன் மற்றும் மீளாய்வு

(அ) 1964 ஒக்தோபர் 01 ஆந் திகதி இலக்கம் 14/186 உடைய மற்றும் 2011 யூன் 30 ஆந் திகதி இலக்கம் 1712/21 உடைய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் நியமிக்கப்பட்ட வியாபார நடவடிக்கைகளில் பின்வரும் நடவடிக்கைகள் கூட்டுத்தாபனத்தினால் மேற்கொள்ளப்படவில்லை.

(i) கூட்டுத்தாபனத்தினால் நேரடியாக அல்லது முகவர்கள் மூலமாக ஆழ்கடல் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடல்

(ii) மீன் பதனிடுதல்

(iii) அங்கீகரிக்கப்பட்ட முகவர் மூலமாக மீன்களை தொகையாக மற்றும் சில்லறையாக வியாபாரம் செய்தல்.

(iv) மீன் மற்றும் மீன் உற்பத்திகளை இறக்குமதி மற்றும் ஏற்றுமதி செய்தல்

(v) வெளிநாட்டு வியாபார நிலையங்களில் மீன் விற்பனை

(ஆ) கடற்றொழில் கூட்டுத்தாபனத்தை ஆரம்பிக்கும் போது கூட்டுத்தாபனத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்த கடல் துறைமுகப்பகுதி மற்றும் நங்கூரத் தளங்களை நிர்மாணித்தல் மற்றும் பராமரித்தல், மீனவர் உபகரணங்கள் இறக்குமதி செய்தல் மற்றும் விற்பனை, மீன்பிடி படகுகள் உற்பத்தி செய்தல், மீன்பிடி படகுகள் தொடர்பான பழுதுபார்த்தல் வசதிகள் வழங்குதல், மீனவர்களின் தேவைக்கேற்ப அவசியமான உபகரணங்களை உருவாக்கி விற்பனை செய்தல் போன்ற வியாபார நடவடிக்கைகள் கடற்றொழில் அமைச்சின் கீழ் இலங்கை கடற்றொழில் துறைமுக கூட்டுத்தாபனம், வரையறுக்கப்பட்ட சீ-நோர் மன்றம் மற்றும் இலங்கை தேசிய நீரியல்வாழ் உற்பத்தி அபிவிருத்தி அதிகாரசபை ஆகிய நிறுவனங்கள் ஸ்தாபிக்கப்பட்டதுடன் அவ் நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தாலும் அதற்கமைய கூட்டுத்தாபனத்தின் வியாபார பணிகள் திருத்தியமைத்தல் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(இ) செயற்திறன் அறிக்கைக்கு அமைய, நடைமுறையாண்டில் கூட்டுத்தாபனத்தின் பிரதான நடவடிக்கைகளில் இலக்கை அடைவது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) மீளாய்வாண்டில் ரூபா 2,211 மில்லியன் ஐ செலவு செய்து 6000 மெற்றிக் தொன் மீன்களை கொள்வனவு செய்யவும் மெற்றிக் தொன் 6000 மீன்களை விற்பனை செய்து ரூபா 2,911 மில்லியன் ஐ வருமானமாக பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கப்பட்டது. இருப்பினும், முன்னேற்ற அறிக்கையின் (Progress Report) படி ரூபா 1,621 மில்லியன் செலவு செய்து 4264 மெற்றிக்தொன் மீன்கள் மட்டுமே கொள்வனவு செய்யப்பட்டதுடன் 3914 மெற்றிக்தொன் அளவிலான மீன்கள் விற்பனை செய்யப்பட்டு ரூபா 2,059 மில்லியன் ஐ வருமானமாக பெற்றுக்கொண்டிருந்தது. அதற்கமைய, கொள்வனவு செய்யப்பட வேண்டிய மீன் தொகையை 35 சதவீதத்தாலும் விற்பனை தொடர்பான இலக்கை 65 சதவீதத்தாலும் நெருங்க முடியாது போனது. கடற்றொழில் அமைச்சின் புள்ளிவிபரங்களின் அடிப்படையில் 2017 ஆம் ஆண்டு இலங்கையின் மீன் உற்பத்தி 531,310 மெற்றிக்தொன் ஆகும். இதில் 0.73 சதவீதமான மீன்தொகையான 3914 மெற்றிக்தொன் மட்டுமே கூட்டுத்தாபனத்தினால் விற்பனை செய்யப்பட்டது. இதனால் கூட்டுத்தாபனத்தின் பிரதானமான குறிக்கோளான நுகர்வோருக்கு சலுகை விலையில் மீன்களை வழங்குவதன் மூலம் நாள்தோறும் நுகர்வோரின் மீன் தேவைப்பாட்டை பூர்த்தி செய்யும் பணியை நிறைவு செய்ய முடியாது இருந்தது.

(ii) நடப்பாண்டில் புதிய குளிரூட்டும் வளாகங்களை நிர்மாணிப்பதற்கும் களஞ்சிய தேவைப்பாட்டை புதுப்பிப்பதற்கும் ரூபா 350 மில்லியன் ஐயும் கூட்டுத்தாபனத்தின் நடவடிக்கைகளை கணனிமயப்படுத்தலுக்காக (ERP) ரூபா 3 மில்லியனையும் ஒதுக்கியிருந்த போதிலும் வேலைகள் நடப்பாண்டில் நடைபெறவில்லை.

(ஈ) மீளாய்வாண்டில் மீன்கள் விற்பனைக்காக காகில்ஸ் (Cargills) கீல்ஸ் சுபர் (Keels Super), லாப்ஸ் சுபர் (Laugh Super) என்பவற்றுடன் வர்த்தக பகிர்வை ஏற்படுத்திக்கொள்ள திட்டமிடப்பட்ட போதிலும் காகில்ஸ் நிறுவனத்துடன் மட்டுமே வர்த்தக பகிர்வை மேற்கொண்டிருந்தது.

(உ) வருடாந்த செயல் திட்டத்தை தயாரிக்கும் போது ஒவ்வொரு செயல் தொடர்பாகவும் எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறு, வரவு செலவு திட்ட ஒதுக்கீடு மற்றும் செயல்திறன் அளவீடுகள் முன்வைக்கப்படாத நிலையில் கடந்த வருடங்களில் ஐஸ் கட்டி விற்பனை மூலம் ரூபா 45 மில்லியன் வருமானமாக பெற்ற போதும் நடப்பாண்டில் இவ்வேலை செயல் திட்டத்தில் குறிப்பிடப்படவில்லை.

### 3.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2003 யூன் 02 ஆந் திகதி இலக்கம் பீஈடீ 12 ஐ உடைய அரச முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.4.2 ஆம் பிரிவிற்கமைய, வருடாந்த செயலாற்றலை மதிப்பீடு செய்தல் தொடர்பான மூத்த முகாமைத்துவ குழுவை பணிப்பாளர் சபையினால் நியமிக்கப்பட வேண்டி இருப்பினும், கூட்டுத்தாபனத்தின் வருடாந்த செயல்திறன் மதிப்பீடு செய்தல் தொடர்பாக இத்தகைய மூத்த முகாமைத்துவ குழு நியமிக்கப்படவில்லை. இதனால் கூட்டுத்தாபனத்தினால் செயல்திறன் மதிப்பீடு செய்தல் தொடர்பில் பணிப்பாளர் சபையின் கவனத்திற்கு வராதிருந்தது. இதன் காரணமாக பிரதேச மீன் விற்பனை நிலையங்கள் 32 இன் 2014 ஆம் வருடம் 28 நிலையங்களும் 2015 ஆம் வருடம் 30 நிலையங்களும் 2016 ஆம் ஆண்டு 27 நிலையங்களும் நட்டத்தை ஏற்படுத்தி இருந்தபோதிலும், முறையாக அந்தந்த வருடங்களில் பெற்றுக்கொள்ளப்பட்ட முழு நட்டம் ரூபா 180,538,573 உம், ரூபா 138,040,828 உம் மற்றும் ரூபா 68,184,221 உம் ஆகும். 08 ஐஸ் இயந்திர சாலைகளும் 2015 ஆம் ஆண்டு ரூபா 33.364,965 உம் 2016 ஆம் ஆண்டில் ரூபா 17,581,153 உம் நட்டத்தை ஏற்படுத்தியிருந்த போதிலும் கூட்டுத்தாபனத்தினால் இந் நட்டத்தை குறைத்துக் கொள்வதற்கான திட்டத்தை நடப்பாண்டின் முடிவு வரையிலும் உருவாக்கியிருக்கவில்லை.

(ஆ) கூட்டுத்தாபனத்தை மறுசீரமைப்பு செய்து இலாபமீட்டும் வர்த்தக வியாபாரமாக மாற்றுவதற்கான குறிக்கோளின் அடிப்படையில் அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் தன்னார்வ ஓய்வூதியம் பெறும் முறையை நடைமுறைப்படுத்தி 2016 மார்ச் 18 ஆந் திகதி 02/2016 இலக்கம் உடைய அரச முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் 2016 மே 20 ஆந் திகதி ரூபா 109,906,261 ஐ செலவு செய்து 102 சேவையாளர்கள் ஓய்வு பெற்றிருந்தனர். இருப்பினும், கூட்டுத்தாபனம் இலாபமீட்டும் வர்த்தக வியாபாரமாக மாற்றமடைவதற்கான இலக்கை அடைவதற்கு வேண்டிய ஏனைய திட்டங்களை மேற்கொண்டிருக்கவில்லை.

(இ) கடந்த 6 வருட காலத்திலும் கூட்டுத்தாபனத்தின் பங்குகளின் பெறுமதி பங்கு சந்தையில் 1.1 சதவீதத்திலிருந்து 0.7 சதவீதமாக குறைவடைந்திருந்த போதிலும் இதற்கான காரணங்களை தேடி பங்குசந்தையில் பங்குகளின் பெறுமதியை அதிகரிப்பதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. இதனால் மீன்களின் விலையை நிலைப்படுத்துதல் தொடர்பான முகவராக செயல்படுத்தல் மற்றும் உயர் நற்பண்புகளையுடைய நுகர்வோர் சேவையை மேற்கொள்ளல் போன்ற குறிக்கோள்களை அடைய முடியாதிருந்ததுடன் இது கூட்டுத்தாபனத்தின் தொடர்ந்து இயங்கும் தன்மைக்கு பாதகத்தை ஏற்படுத்தும் வகையில் உள்ளது.

(ஈ) 2011 வருடம் நடைபெற்ற ரூபா 2,558,028 பெறுமதியான பொதியிடப்பட்ட பொருள் (Package) கையிருப்பு பற்றாக்குறை தொடர்பான பொறுப்பு கூற வேண்டிய பண்டகசாலை முகாமையாளருக்கு எதிராக நடாத்தப்படும் ஒழுக்காற்று விசாரணையில் அந்த குறைவுக்கு தொடர்பான ஊழியரிடமிருந்து மீளப் பெற்றுக்கொள்வதற்காக 2016 மார்ச் 09 ஆந் திகதி தீர்மானம் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டு முடிவின் போதும் அதனை மீளப்பெற்றிருக்கவில்லை.

(உ) இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் ஒழுக்க கட்டளைக் கோவையின் ''அ'' அட்டவணையின் கீழ் கடமை புறக்கணிப்பு அல்லது முறையற்ற செயற்பாடுகளில் ஈடுபடுதல் போன்ற தவறுகளின் கீழ் மூன்று உத்தியோகத்தர்களுக்கு எதிராக முறையான ஒழுக்காற்று பரிசோதனை நடாத்தப்பட்டு ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட போதிலும் வைத்தியசாலை தொடர்பாக மீன்கள் விற்பனை சம்பந்தமாக பெற்றுக்காள்ளப்பட வேண்டிய ரூபா 13.9 மில்லியன் நிலுவைக்கடன் மீதியை பெற்றுக்கொள்வதற்கான முறையான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஊ) 2001 பெப்ரவரி மாதம் ரூபா 192,000 பெறுமதியான காசு முறைகேடொன்றுடன் ஆன 12 முறைகேட்டு நடவடிக்கைகள் தொடர்பில் குற்றஞ்சாட்டப்பட்டு பணி நீக்கம் செய்யப்பட்ட கூட்டுத்தாபனத்தின் உதவி முகாமையாளருக்கெதிரான முறையான ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளாத நிலையில் 2001 செப்தெம்பர் 03 ஆந் திகதியில் இருந்து II ஆம் வகுப்பு நிறைவேற்று முகாமையாளர் பதவிக்கும் 2011 ஒக்தோபர் 20 ஆந் திகதி தொடக்கம் I ஆம் வகுப்பு நிறைவேற்று முகாமையாளர் பதவிக்கும் பதவி உயர்த்தப்பட்டதுடன் 2015 ஆம் ஆண்டு செப்தெம்பர் 21 ஆந் திகதி முதல் பிரதான காரியாலயத்தின் குளிரூட்டல் பிரிவின் முகாமையாளராக நியமிக்கப்பட்டார். இருப்பினும், 2016 ஆம் ஆண்டு இவர் சேவை நீக்கம் செய்யப்பட்டிருந்த போதும் நடப்பாண்டின் இறுதி வரையிலும் நட்டஈடு பெற்றுக்கொள்ளப்படவில்லை.

(எ) கூட்டுத்தாபனத்தினால் 08 மாவட்டங்களிலும் பாவனையிலுள்ள 12.47 ஏக்கர் அளவிலான 15 இடங்கள் குறிப்பிட்ட பிரிவினர்களால் முறையாக உரிமை மாற்றம் செய்யப்படாதிருந்தது.

(ஏ) கடற்றொழில் கூட்டுத்தாபன தலைவரினால் பிறப்பிக்கப்பட்ட 2013 மார்ச் 6 ஆந் திகதி இலக்கம் எஸ்பீசீ/1/2/6 உடைய கடற்றொழில் மற்றும் நீரியல் வள அபிவிருத்தி அமைச்சின் தேசிய நிகழ்ச்சித்திட்ட ஆலோசகரின் கடிதத்திற்கமைய ரூபா 15 மில்லியன் பெறுமதியான திருகோணமலை மீன்கள் விற்பனை நிலையம் 2013 மார்ச் 09 ஆந் திகதி முதல் கூட்டுத்தாபனத்திற்கு உரிமை மாற்றம் செய்யப்பட வேண்டி இருந்தும், கணக்காய்வு திகதி வரையான 2018 ஒக்தோபர் வரையும் உரிமை மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஐ) 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் பௌதீக தொகை மதிப்பீட்டின்படி விற்பனைக்குரிய மீன்களின் பௌதீக தொகை புத்தக பெறுமதியுடன் ஒப்பிடும் போது கிலோகிராம் 6,940.64 குறைவை காட்டுவதுடன் இக்குறைவுக்குரிய காரணத்தை கண்டறிந்து உரிய நபர்களிடமிருந்து பெற்றுக்கொள்வதற்கு 2018 ஒக்தோபர் வரையில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஒ) கூட்டுத்தாபனத்தின் திட்டமிடல் முகாமையாளராக பணிபுரிகின்ற ஊழியர் 11 குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் குற்றஞ்சாட்டப்பட்டு பதவி நீக்கம் செய்யப்பட்ட போதிலும், முறையான ஒழுக்காற்று பரிசீலனை செய்யப்படாது 2009 யூலை 7 ஆந் திகதி முதல் மீண்டும் வேலைக்கமர்த்தப்பட்டு 6 பிரதேச மீன் விற்பனை நிலைய முகாமையாளர்பதவிக்கு நியமிக்கப்பட்டிருந்தார்.

(ஓ) 2015 ஆம் ஆண்டு 3 உள்ளக கணக்காய்வு அறிக்கையில் குறித்துக் காட்டப்பட்டுள்ள நட்டம் மற்றும் மீளப்பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய மீதி முறையாக ரூபா 8,356,253 மற்றும் ரூபா 5,139,900 ஆக உள்ள போதிலும், மீளப்பெற்றுக்கொள்ள மற்றும் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்கவில்லை.

(ஔ) 2010 சனவரி 20 ஆந் திகதி முதல் மாதாந்தம் ரூபா 200,000 படி 2 வருடத்திற்கு குத்தகையடிப்படையில் தனியார் நிறுவனத்திற்கு குத்தகைக்கு விடப்பட்ட கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான ரூபா 66,715,516 பெறுமதியான பலநாள் மீன்பிடி இழுவைப்படகுகள் இரண்டு தொடர்பான, 2011 சனவரி முதல் 2013 நவம்பர் வரையான காலப்பகுதிக்குரிய பெற வேண்டிய குத்தகைப் பணம் தொகை ரூபா 6,000,000 தொடர்பில் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. மேல் குறிப்பிடப்பட்ட இழுவைப்படகுகளானது போட்டி விலைக் கோரல் முறைமைக்கு மாறாக தெரிவு செய்யப்பட்ட ஒரு குத்தகையாளருக்கு மீண்டும் 2014 ஆம் ஆண்டு குத்தகைக்கு விடப்பட்டது. மேலும் ஒப்பந்தம் கைச்சாத்திடுவதற்கு முன்பாக பலநாள் மீன்பிடி இழுவைப் படகானது குத்தகை பெறுவோரிடத்தில் இருந்ததுடன் 2014 சனவரி முதல் செப்தெம்பர் வரை இழுவைப் படகுக்குரிய ரூபா 1,125,000 பெறுமதியான குத்தகைப் பணத்தை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இருப்பினும், 2016 ஆம் ஆண்டு இரு இழுவைப் படகுகளும் ரூபா 5,626,500 க்கு விற்பனை செய்யப்பட்ட போதிலும் கூட்டுத்தாபனம் அமைக்கப்பட்டதன் குறிக்கோளான நேரடியாக கடலில் இழுவைப்படகு பாவித்து மீன்பிடிக்கும் இலக்கை அடையமுடியவில்லை.

## 3.3 செயற்பாட்டு நடவடிக்கைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) கூட்டுத்தாபனத்தின் மிகை ஊழியர் எண்ணிக்கை காணப்படல், உயர் முகாமைத்துவ பதவிகளில் இருக்கும் உத்தியோகத்தர்கள் குறுகிய காலத்தில் மாற்றமடைதல் போன்ற காரணங்களால் கூட்டுத்தாபனத்தின் திட்டம் தொடர்ந்து மாற்றமடைதல் மற்றும் தொழிற்பாட்டு மூலதனத்தில் நெருக்கடி ஏற்படல் என்பதாலேயே கூட்டுத்தாபனமானது 2005 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து நட்டம் ஏற்பட பிரதான காரணங்களாக அமைந்திருந்தது

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் 250 மீன் விற்பனை கூடங்களை நிர்மாணிப்பதற்குரிய இலக்கை அடைவதற்குரிய சாத்தியவள ஆய்வொன்றை மேற்கொள்ளாமல் 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் அரச வங்கி ஒன்றிலிருந்து ரூபா 100 மில்லியன் கடன் பெற்றுக்கொள்ளப்பட்டு அதற்காக ரூபா 38.5 மில்லியன் வட்டி செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2010 தொடக்கம் 2014 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியால் ரூபா 47.2 மில்லியன் செலவு செய்து 91 விற்பனைக்கூடங்கள் மாத்திரமே நிர்மணிக்கப்பட்டிருந்த போதிலும் 2016 ஆம் ஆண்டாகும் போது 172 விற்பனைக் கூடங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் போதியளவான மீன்கள் விற்பனை காணப்படாமை, நெடுஞ்சாலைகள் விரிவுபடுத்தப்பட்டமை போன்ற காரணங்களால் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் 75 விற்பனைக் கூடங்கள் மூடப்பட்டிருந்தன. மேலும் நிர்மாண நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு முன்னதாக காணிகளின் உரித்தை சுவீகரிக்காததன் காரணமாக ஏற்பட்டுள்ள சட்ட பிரச்சினைகளை தீர்ப்பதற்காக அதிக செலவு மேற்கொள்ள வேண்டியுள்ளது.

(இ) வெளிநாடுகளிலிருந்து மீன்கள் இறக்குமதி செய்தல் கூட்டுத்தாபனத்தின் வியாபார நடவடிக்கைகளாக உள்ள போதும் கூட்டுத்தாபனத்தினால் நேரடியாக வெளிநாட்டவர்களிடமிருந்து மீள்கள் இறக்குமதி செய்வதற்கு பதிலாக,இலங்கையிலுள்ள மீன்கள் இறக்குமதி செய்யும் முகவர்கள் மூலமாக நடப்பாண்டில் மெற்றிக் தொன் 535.091 மீன் தொகையானது ரூபா 309,090,621 க்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இதன் காரணமாக கூட்டுத்தாபனத்தின் ஒரு குறிக்கோளான மீன்கள் குறைவாக உள்ள காலத்தில் வெளிநாட்டிலிருந்து குறைந்த விலைக்கு மீன்கள் இறக்குமதி செய்து சந்தையில் விலை கட்டுப்பாட்டை மேற்கொள்ளலானது முடியாது போனது.

(ஈ) கூட்டுத்தாபனத்தினால் மீன்கள் விற்பனை செய்தல் தொடர்பாக கீழ் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) முகவர்களினூடாக நாட்டின் சகல மாவட்டங்களும் உள்ளடங்கும் வகையில் மீன்கள் விற்பனை மேற்கொள்ள தவறியதால் மீன்களின் சந்தை விலை நிலைப்புத் தன்மையை பேணும் ஒரு நிறுவனமாக செயற்படுவதற்கு கூட்டுத்தாபனமானது தவறியுள்ளது.

(ii) 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் மீன்கள் விற்பனை செய்தல் தொடர்பாக 10 முகவர்கள் இருந்தபோதும், 3 பேரே செயல்படும் முகவர்களாக இருந்தனர். மேலும், 2017 திசெம்பர் 31 ஆந் திகதி செயல்படாத முகவர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 1,471,890 தொகை ஆனது 10 வருடங்களுக்கும் மேற்பட்டதாகும். இதனை மீளப்பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படாத நிலையில் செயல்படும் முகவர்கள் மூவரிடமிருந்தும் அறவிடப்பட வேண்டிய தொகை 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் ரூபா 785,591 ஆக இருந்தது.

(iii) மீன்கள் விற்பனை செய்யும்போது முகவர்களுடாக மீன்கள் விற்பனை செய்வதன் மூலம் குறைந்த செலவில் பெற்றுக்கொள்ள கூடியதாக உள்ள போதிலும் கூட்டுத்தாபனத்தினால் செலவு கூடிய முறையான புதிய விற்பனை நிலையங்கள் நிர்மாணிக்கப்பட்டு மீன்கள் விற்பனை செய்வதற்காக கூடிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது. மேலும், புதிய விற்பனைக் கூடங்கள் நிர்மாணித்து வியாபார நடவடிக்கைக்கு புதிய ஊழியர்கள் பணிக்கமர்த்தப்பட்டதன் காரணமாக கூட்டுத்தாபனத்தின் செயற்பாட்டு செலவு மேலும் அதிகரித்துள்ளதனை கணக்காய்வின் போது கண்டறியப்பட்டது.

(iv) கூட்டுத்தாபனத்தினால் நேரடியாக அல்லது முகவர்கள் மூலமாக ஆழ் கடல் இழுவைப்படகு மூலம் மீன் பிடித்தலானது கூட்டுத்தாபனத்தை ஸ்தாபிக்கும் போதுள்ள வியாபார பணியாக இருந்தபோதும் இதனை மேற்கொள்ளாது மீன் வழங்குனருக்கு கொடுப்பனவு மேற்கொள்ள ஏற்படும் தாமதம் காரணமாக குறைந்த விலையில் மீன்கள் கொள்வனவு செய்ய கூட்டுத்தாபனத்திற்கு முடியாது போனது

(v) கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான 50 அதி குளிரூட்டியுடனான லொறி வாகனம் இருந்த போதிலும் அவற்றில் 46 லொறிகளில் அதிகுளிரூட்டி இயந்திரம் வேலை செய்யாத போதும் இவ் லொறிகளை மீன் விற்பனை விநியோகத்திற்காக பயன்படுத்தப்பட்டிருந்தன.

(vi) கொள்வனவு செய்யப்பட்ட மீன் தொகை புத்தகத்தில் பதிவு செய்யும் போது, தொகை பெற்றுக்கொள்ளும் படிவத்தில் பண்டகசாலை பொறுப்பாளர், பாதுகாப்பு ஊழியர், தரக்கட்டுப்பாட்டாளர், மேற்பார்வையாளர், உணவு தொழில்நுட்பவியாளர் மற்றும் பொறுப்பு வழங்கப்பட்ட ஊழியர்களில் கையொப்பமின்றி தொகை புத்தகங்களில் பதிவு

செய்யப்பட்டிருந்தது. இதனால் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் மீன்கள் கிலோ 5542 ஐ கருவாடாக மாற்றுவதற்கு தேவைப்பட்டிருந்தது. இதனால் கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 1,549,308 நட்டம் ஏற்பட்டிருந்தது. மேலும், 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் மீன்கள் கிலோ 3244 ஐ கருவாடாக மாற்ற வேண்டியிருந்ததனால் ரூபா 920,068 நட்டம் ஏற்பட்டிருந்தது.

(vii) குளிரூட்டியினுள் ஈர மீன்களை களஞ்சியப்படுத்துவதற்கு முன்பாக அம்மீன்களை அதிகுளிரூட்டி அறையில் (செல்சியஸ் பிரிவு - 40) குளிரூட்ட வேண்டுமெனினும் கூட்டுத்தாபனத்தின் அதிகுளிரூட்டி இன்மையால் 2017 ஒக்தோபர் முதல் 2018 ஆகஸ்ட் மாதம் வரை ஈர மீன்கள் கிலோ 74,961 ஐ கொள்வனவு செய்திருந்தது. இவை அதிகுளிரூட்டி இன்மையால் சாதாரண குளிரூட்டிகளில் ஈர மீன்கள் குளிரூட்டும் போது 4 தொடக்கம் 5 வரையான நாட்கள் தேவைப்படும், மீன்களின் நிறைகுறைவடைவதுடன் மீன்கள் விரைவாக பழுதடைய கூடியதாக இருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(viii) 2017 நவம்பர் 9 ஆந் திகதி கூட்டுத்தாபனத்தின் உள்ளக கணக்காய்வாளரினால் பிறப்பிக்கப்பட்ட இலக்கம் சீஎப்சீ/ஏ/எஸ்-ஒபி/17-16 ஐ உடைய உள்ளக கணக்காய்வு அறிக்கையின் படி கூட்டுத்தாபனத்தின் உள்ளக கணக்காய்வாளர் இறக்குமதி செய்யப்பட்ட தலபத் மீன்களை பரீட்சிக்கும் போது 100 கிலோ மீன் தொகையில் 4 கிலோகிராம் ஐஸ் அடங்கியிருந்தது. கூட்டுத்தாபனத்தினால் இறக்குமதி செய்யப்படும் மீன்கள் கொள்வனவு செய்யப்படும்போது ஐஸ் நிறைக்கும சேர்த்து வழங்குனருக்கு பணம் செலுத்தப்பட்டிருந்தது அவதானிக்கப்பட்டதுடன், இதற்கமைய இறக்குமதி செய்யப்பட்ட மீன்களின் தொகை 100 கிலோகிராம் க்கு 3 கிலோ ஐஸ் ஆவது குறைந்த பட்சமும் இருப்பின் நடப்பாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட 535,091 கிலோ மீன் தொகையில் கிட்டத்தட்ட 16,052 கிலோ ஐஸ் உள்ளடங்கியிருக்குமென அவதானிக்கப்பட்டது. அதற்கமைய ஐஸ் நிறையின் மதிப்பீட்டளவு பெறுமதி ரூபா 9,149,640 ஆகும். ஈர மீன்களை கொள்வனவு செய்ததால் கூட்டுத்தாபனமானது ரூபா 9,149,640 அளவிலான நட்டத்தை ஏற்க வேண்டி இருந்த போதிலும் முகாமையாளரால் இது தொடர்பாக அவதானம் எடுக்கப்படவில்லை.

## 3.4 பயன்படுத்தப்படாததும் குறைப் பயன்பாட்டிலான சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான அனுராதபுரத்திலுள்ள பழைய உப உற்பத்தி தொழிற்சாலையொன்று, பொலன்னறுவை, இரத்தினபுரி, புத்தளம், வேலணை, சாய்ந்தமருது, பேறுவல மற்றும் ஹம்பன்தொட ஆகிய பிரதேசங்களில் அமைந்துள்ள 07 ஐஸ் இயந்திரச்சாலை உத்தியோகபூர்வ விடுதியொன்று, கருவாடு உலர்ந்தும் முற்றம் (yard) திருகோணமலையில் அமைந்துள்ள வலை உற்பத்தி தயாரிக்கும் நிலையொன்று, மன்னாரிலுள்ள பழைய கருவாடு உலர்ந்தும் முற்றம் (yard) மற்றும் பேசாலையிலுள்ள ஐஸ் இயந்திரசாலை, மட்டக்களப்பிலுள்ள 03 கொள்கலன் குளிரூட்டிகள் யாழ்ப்பாணத்திலுள்ள கரையூர் இடம் மற்றும் குளிரூட்டப்பட்ட கட்டிடத்தொகுதி, குருணாகலையிலுள்ள இடம் மற்றும் பழைய சுற்றுலா பங்களா என்பன பாவிக்கப்படாத நிலையில் 2 தொடக்கம் 29 வருட காலமாக உள்ளது.

(ஆ) கூட்டுத்தாபனத்துக்கு சொந்தமான 20 வாகனங்கள் கூட்டுத்தாபன சூழலிலும் மற்றும் விற்பனை நிலையங்களிலும் விளைவற்றுக் காணப்படுவதாக உள்ளகக் கணக்காய்வு அறிக்கை மூலம் வெளிப்படுத்தப்பட்டது.

(இ) மோதர, குளிரூட்டி வளாகத்தில் 07 சுருக்க இயந்திரங்கள், 13 குளிரூட்டி அறைகள், 04 அதிகுளிரூட்டி அறைகள், 02 கன்டென்சர் என்பன பாவனைக்குட்படுத்தப்படாதிருந்தன.

### 3.5 வேறு நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் வளங்கள்

கூட்டுத்தாபனத்தின் 05 ஊழியர்கள் வேறு 4 அரச நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்டதுடன் ஊழியர்கள் இருவருக்கு கூட்டுத்தாபனத்தின் நிதியிலிருந்து ரூபா 1,662,930 சம்பளம் வழங்கப்பட்டிருந்தது.

### 3.6 ஊழியர் நிர்வாகம்

2017 திசெம்பர் 31 திகதியில் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் விபரத்திற்கு அமைவாக கூட்டுத்தாபனத்தின் நாளாந்த வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ள தேவையான மூத்த நிலை பதவியான பொது முகாமையாளர் உதவி பொது முகாமையாளர் மனித வள அபிவிருத்தி மற்றும் நிர்வாக, கொள்முதல் முகாமையாளர், கொடுப்பனவு கணக்காளர் மற்றும் முகாமைக் கணக்காளர் உட்பட 13 பதவிகளில் 17 குறைபாடுகளும் மற்றும் கீழ் மட்ட பதவிகள் 12 இல் 35 குறைபாடுகளும் இருந்தன. இந் நிலைமையில் கூட்டுத்தாபனத்தின் நிர்வாக வேலைகள் மற்றும் செயலாற்றல் நடவடிக்கைகளுக்குகெதிராக பாதகமான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளன.

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளக கணக்காய்வு

கூட்டுத்தாபனத்தில் 16 அதிகாரிகளை கொண்ட உள்ளகக் கணக்காய்வு பிரிவொன்று இருந்த போதிலும், பிரதான உள்ளக கணக்காய்வாளர் நியமிக்கப்படாதிருந்தார். மேலும், உள்ளக கணக்காய்வு அறிக்கைக்கு அமைய விலை நிர்ணய குழுவின் விலையை விட அதிக விலைக்கு கொள்வனவு செய்தல், பொய்யான பெயர்களில் கடனுக்கு கொள்வனவு செய்தல், காசேடு தினந்தோறும் முறையாக பேணப்படாமை மற்றும் 17 விற்பனை நிலையங்களுக்குரிய ரூபா 7,846,780 நிலுவையாக உள்ளமை மற்றும் மீளப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளாமையும் மற்றும் மெற்றோ விற்பனை நிலையத்தில் கடன்கொடுத்தோர் மீதி ரூபா 11,209,369 உம் கடன்பட்டோர் மீதி ரூபா 7,730,607 உம் இருந்தது. இந்த மீதிகளை தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளவில்லை.

### 4.2 தீர்த்து வைக்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்

(அ) 2006 வருடத்தில் தனியார் கம்பனியுடன் ஏற்படுத்தியிருந்த மாற்று வியாபார நடவடிக்கை 2010 ஆம் ஆண்டின் போது தோல்வியடைந்ததால் அதில் முதலீடு செய்யப்பட்ட இடத்தின் உரிமை மீளப் பெற்றுக்கொள்ளுதலும் நிலுவையாக உள்ள கடன்பட்டோர் மீதி ரூபா 214.4 மில்லியன்கள் மீளப்பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு பாராளுமன்ற பொது முயற்சிகள் மீதான கணக்குக் குழுவினால் பணிக்கப்பட்டிருப்பினும் இந்த பணிப்புரைகள் செயற்படுத்தப்படவில்லை.

(ஆ) ஐரோப்பிய சங்கத்தினால் விதிக்கப்பட்ட தடைகளை அகற்றும் வரை மீனவர்களின் மிகை மீன் அறுவடையை கொள்வனவு செய்வதற்காக திறைசேரி நிதி ஏற்பாட்டின் பேரில் ஆரம்பிக்கப்பட்டிருந்த டூனா செயற்திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட கூறுவிலைகளிலிருந்து விலகி அப்போதைய உப தலைவரின் அங்கீகாரத்தின் பேரில் மீன் இருப்பு கொள்வனவு மற்றும் விற்பனை செய்யப்பட்டதன் காரணமாக 02 வார காலப்பகுதிக்காக ரூபா 47,359,695 ஆன நட்டம் தொடர்பாக பொது முயற்சிகள் குழுவின் கட்டளையின் பிரகாரம் அமைச்சரின் பரிந்துரை பணிப்பாளர் சபை கலந்துரையாடல்கள், டூனா செயற்திட்டத்திற்காக சாத்தியவள ஆய்வொன்றை மேற்கொள்ளாமைக்கான காரணம் தொடர்பான முறையான அறிக்கையொன்று 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படாமை.

## 5. நிலைபேறான அபிவிருத்தி

### 5.1 நிலைபேறான அபிவிருத்தி இலக்கை அடைதல்

2017 ஆகஸ்ட் 14 ஆந் திகதி இலக்கம் எஸ்பி/எஸ்ஜீ/எஸ்டீஜீ/17 உடைய அரச கொள்கைகள் மற்றும் அரச பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் கடிதத்திற்கு அமைய மற்றும் நிலையான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகள் அமைப்பின் 2030 ஆம் வருட ''நிகழ்ச்சி நிரல்'' க்கு அமைய எல்லா அரச காரியாலயங்களிலும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டி இருப்பினும் நடைமுறை ஆண்டில் இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தால் அதன் நோக்கத்தின் கீழ் குறிப்பிடப்பட்ட விடயங்களை நடைமுறைப்படுத்தல் எவ்வாறான நடைமுறைகளை மேற்கொள்ள வேண்டும் என அறிந்திருக்கவில்லை. இதன்காரணமாக கூட்டுத்தாபனத்தினால் அவர்களின் நோக்கம் தொடர்புடைய நிலைபேறான அபிவிருத்திக்கான நோக்கங்களை, இலக்கை மற்றும் அந்த இலக்கை அடைவதற்கான மைல்கல்லை, இவ் இலக்கினை அடைவதற்கான மதிப்பீடு செய்யப்பட்ட குறியீட்டை அடையாளம் காண நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது கூட்டுத்தாபனத்தின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறை | | அவதானிப்புகள் |
|---|---|---|---|
| (அ) | வருமானக் கட்டுப்பாடு | - | விற்பனை நிலைய முகாமையாளரால் மேற்கொள்ளப்படும் மீன் விற்பனை தொடர்பான வருமானத்தை அறவிடுதல் நலிவுற்ற நிலையில் இருந்தமை மற்றும் பல ஆண்டுகளாக நிலுவையாக இருந்த வருமானத்தை அறவிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாதிருந்தமை |
| (ஆ) | பாதீட்டுக் கட்டுப்பாடு | - | அங்கீகரிக்கப்பட்ட பாதீடு செய்யப்பட்ட கணக்குகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமை. |
| (இ) | கையிருப்புக் கட்டுப்பாடு | - | அதிஉயர் கையிருப்பு மட்டம் தீர்மானிக்கப்படாமையும் கையிருப்பை வழங்கும் விதிமுறைகளும் அறிமுகஞ் செய்யப்படாமை மற்றும் பயன்பாட்டிற்கு பொருத்தமற்ற கையிருப்பு நிலவுதலும். |
| | | - | தரம் குறைந்த கையிருப்பைக் களஞ்சியப்படுத்தல். |
| | | - | கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான மீன்களை சந்தைப்படுத்தலில் முறையான விதிமுறை இல்லாமை |
| | | - | பயன்பாட்டிற்கு பொருத்தமற்ற மீன்களை நல்லநிலையில் உள்ள மீன்களுடன் களஞ்சியப்படுத்தல். |
| (ஈ) | சொத்துக்கள் பயன்பாடு | - | வெளித்தரப்பினரிடமுள்ள மீன்கள் முறையாக குளிரூட்டப்படாமை காரணமாக அவற்றை மீள குளிரூட்டுவதற்காக மேலதிக கிரயமொன்று மேற்கொள்ள நேர்கின்றமை. |

- குளிரூட்டி அறையில் மீன்களை களஞ்சியப்படுத்தும் போது தரக்கட்டுப்பாடு உத்தியோகத்தர்களால் களஞ்சியத்திற்கு கிடைக்கும் மீன் இருப்பு தரமாக இருப்பதாக சான்றுறுதிப்படுத்தாமை.